www.omsakthionline.com

# ஓம் சக்தி

ஆசிரியர்
நா. மகாலிங்கம்



ஸ்வாமி நாராயண் அக்ஷர்தாம் - புதுடெல்லி

# இடஒதுக்கீட்டின் இரு வழக்குகள்

நா. மகாலிங்கம்



டெல்லி உச்சநீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளின் விசாரணைகள் நடைபெற்று வந்தன. முதல் வழக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு தரப்பட்டு வருவது போல, அவர்களுடைய பதவி உயர்வுக்கும்கூட, இடஒதுக்கீடு செய்யலாமா, கூடாதா என்கிற வழக்கு.

இந்த வழக்கு 1992-இல் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டு இதற்கான தீர்ப்பு கடந்த 2006 அக்டோபர் 19-ஆம் தேதி வெளியானது.



பதவி உயர்வுக்கும் இடஒதுக்கீடு தரலாம் என்றும், ஆனால் இடஒதுக்கீடு 50 சதவிகிதத்தைத் தாண்டக் கூடாது என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இவற்றுடன், இடஒதுக்கீட்டால் மீண்டும் மீண்டும் இச்சலுகைகளை அனுபவித்து முன்னேறி உள்ளவர்களை இடஒதுக்கீட்டிலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்றும் அத்தீர்ப்பு கூறியுள்ளது.

இந்த வழக்கு அல்லாமல், உச்சநீதிமன்றத்தில் இன்னொரு வழக்கும் நடந்து வந்தது. தமிழ்நாட்டில் மட்டும் பின்பற்றப்பட்டு வரும் 69 சதவிகித இடஒதுக்கீட்டுச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதற்கான வழக்கு அது.

1950-இல் உருவாக்கப்பட்ட நமது அரசமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு 15 சதவிகிதமும், பழங்குடியினருக்கு 7.5 சதவிகிதமும் மொத்தம் 22.5 சதவிகிதமும் அரசு கல்வி நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என வகுக்கப்பட்டது.

பின்னர் மற்ற சாதிப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு விரிவாக்கப்பட்டது. ஆனால், அப்போதே மொத்த இடஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு அதிகமாகக் கூடாது என்று உச்சநீதிமன்றம்


PIONEERS IN IMPORT SUBSTITUTION
POLYURETHANE COMPONENTS AND SPARES
APPLICATIONS
OIL EXPLORATIONS
VALVES FOR SLURRY APPLICATIONS
HIGH TORQUE COUPLINGS
MINES
SEALS & GASKETS
SHREERAM POLYPLAST